செ.வெ.எண்.39 நாள்: 16.10.2020

# பத்திரிக்கை செய்தி

**தசை சிதைவு நோய் அல்லது முதுகுதண்டுவடம் பாதிக்கப்பட்டு இரண்டு கைகள் இரண்டு கால்கள் செயலிழந்துள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு பாட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலி வழங்குவதற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது**

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் தசை சிதைவு நோய் அல்லது முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டு இரண்டு கைகள் மற்றும் கால்கள் செயலிழந்துள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு பாட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கர நாற்காலி வழங்கப்படுகிறது.

கரூர் மாவட்டத்தில் உள்ள தசைசிதைவு நோய் அல்லது முதுகு தண்டுவடம் பாதிக்கப்பட்டு இரண்டு கைகள் மற்றும் கால்கள் செயலிழந்துள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு சிறப்ப சக்கர நாற்காலி வழங்கப்படவுள்ளது. பாட்டரியால் இயங்கும் சிறப்பு சக்கரநாற்காலி ஒரு நபருக்கு ஒரு முறை மட்டுமே வழங்கப்படும். ஏற்கனவே பயனடைந்தவர்கள் விண்ணப்பிக்க இயலாது.

எனவே இச்சிறப்பு சக்கர நாற்காலி தேவைப்படுவோர் தங்களின் மாற்றுத்திறனாளிகள் தேசிய அடையாள அட்டை நகல், ஆதார் அட்டை நகல் , குடும்ப அட்டை நகல் மற்றும் பாஸ்போட் சைஸ் புகைப்படம் ஆகிய சான்றுகளுடன் அறை எண் 07 மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம், கரூர் என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது மாற்றுத்திறனாளி நபர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் நேரில் வந்து விண்ணப்பித்து பயனடையுமாறு மாவட்ட ஆட்சியர் தனது செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், கரூர்.**